24th October 1964]

திரு. ம. கமலநாதன்: அப்படி என்றால் இந்தத் திட்டம் எந்தக் கட்டத்தில் இருக்கிறது? இந்தத் திட்டம் துவங்கப்பட்டதா? எங்கு கட்டப்படும்? எவ்வளவு செலவழிக்கப்படுகிறது என்று அறியலாமா?

கனம் திரு. கோ. பூவராகன்: தேசீய நெருக்கடி காரணமாக துவங்கப்படவில்லை. 1964-65-ம் ஆண்டில் துவங்கப்பட இருக்கிறது.

பட்ட வகுப்புகளுக்குத் தமிழ் பயிற்று மொழி

* 81 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழகத்தில் இதுவரை எத்தனை கல்லூரிகளில் பட்ட வகுப்புகளுக்குத் தமிழ் போதனு மொழியாக வைக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : 7 (Seven) Colleges.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, எந்த பாடங்களுக்கு இந்தப் பயிற்சி மொழித் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது? ஒவ்வொரு பாடத்திலும் எத்தனை மாணவர்கள் படித்து வருகிறார்கள்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: Economics, Social Sciences, History.

இந்தப் பாடங்கள் தமிழ் மொழியிலே சொல்லிக்கொடுக்கப்படுகிறது. அது இல்லாமல் Politics, Geography and Psychology அவைகளும் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. மாணவர்களுடைய எண்ணிக்கை இப்பொழுது எவ்வளவு இருக்கிறது என்கின்ற விவரங்கள் என்னிடம் இல்லை.

The Madras Gift Goods (Unlawful Possession) Act, 1961.

* 82 *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of cases detected so far under the Madras Gift Goods (Unlawful Possession) Act, 1961, since its enforcement;

(*b*) the name of district where the number of the cases is highest; and

(*c*) the number of cases ended in conviction, pending and ended in acquittal?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 64.

(*b*) Madurai.

(*c*) Conviction—34.
Acquittal—16.
Pending Trial—7.
Discharged—3.
Under investigation—2.
Undetected—2.

[24th October 1964

திரு. மீ. கலியாணசுந்தரம்: எவ்வளவு பேர்கள் ஆசிரியர்கள்? எவ்வளவு பேர்கள் ஆசிரியர்கள் அல்லாதவர்கள்?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த விவரம் என்னிடம் இல்லே.

அமைச்சர்களின் சொத்து விவரங்கள்

* 83 **கேள்வி.—திரு. மு. கருணுநிதி:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாநிலங்களிலுள்ள அமைச்சர்கள் தங்களுடைய சொத்துக்களின் விவரங்களே அரசாங்கத்திற்கு அறிவிக்க வேண்டுமென்று மத்திய அரசு, மாநில அரசாங்கங்களுக்கு ஏதேனும் உத்திரவு பிறப்பித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் இம்மாநில அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) There has been no directive from the Central Government in this regard. But the Madras Government have decided that the Ministers should report to the Chief Minister and the Party Chief their assets and liabilties and also send annual reports about them. The details are being worked out.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அமைச்சர் அவையிலே இருக்கக்கூடிய அமைச்சர்களெல்லாம் முதல் அமைச்சர்களிடம் தங்களுடைய கணக்குகளேக் கொடுக்கவேண்டும் என்று சொன்ஞர்கள். அமைச்சர்களுடைய பெயரில் இருக்கக்கூடிய சொத்துக்களே மட்டும் கொடுக்கவேண்டுமா? அமைச்சர்களுடைய மனேவிமார்கள் மக்கள் இவர்கள் பெயரில் உள்ள சொத்துக்களின் விவரங்களேயும் கொடுக்கவேண்டுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: Details are being worked out. என்று சொன்னேன். அந்த வகையில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. விவரங்கள் இப்பொழுது கவனிக்கப்பட்டு வருகின்றன.

திரு. இராம. அரங்கண்ணல்: இப்படி அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் யாரிடம் சொத்து விவரங்களேக் கொடுக்கவேண்டும்? அப்படி ஒப்படைக்கின்ற நேரத்தில் அதனுடைய நகல் நமது சபை முன் வைக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சந்தானம் கமிட்டி என்று ஒரு கமிட்டி நிறுவப்பட்டது. பார்லிமெண்டு, மத்திய அரசாங்கம் அதற்கு ஏற்பாடு செய்தது. அவர்கள் லஞ்ச ஒழிப்பு விஷயத்தைப் பற்றி பல சிபார்சுகளேச் செய்திருக்கிருர்கள். அந்த சிபார்சுகளில் இதெல்லாம் கூட சேர்ந்து இருக்கிறது. மந்திரிகளேப் பொறுத்த மட்டில் இந்த ஏற்பாடு. முதல் அமைச்சர் கூட இதில் சேர்ந்தவர் தான். முதல் அமைச்சரும் அந்த விவரங்களெல்லாம் கொடுக்க வேண்டியது தான். அதைக் கட்சி ரீதி